உ
சிவமயம்



மூளாய்

# அமரர் கந்தசாமி தர்மேசன்

# நினைவுச் சிமிழ்

16.08.2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து
அன்போடும் பண்போடும்
பாசத்தோடும் பேணிப் பாதுகாத்து
எம்மை நல்வழி நடாத்தி
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது அன்புத் தெய்வத்தின்
பொன்னடிகளில் காணிக்கையாக
இந் நினைவு மலரினைச்
சமர்ப்பிக்கின்றோம்


குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



**தோற்றம்**
**1953.10.30**

**மறைவு**
**2000.07.18**

# அமரர் கந்தசாமி தர்மேசன்

## திதி வெண்பா

**ஆண்டோ விக்கிரமம் அணிநடையிற் புத்தாயிரமே
ஈண்டதோராடி அமரபக்கத் துதியைதனில் - நீண்டபுகழ்
பூண்டதொரு பேராசான் தர்மேசன் போனான்
வேண்டுவரை விரும்பியே சேர்ப்பான் அடிக்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

நிட்டையிலா உடல் நீத்து எனையாண்ட
நிகரில்லா வண்ணங்களும்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கு என்னகம் நெகவூறும்
அமிர்தனுக்கு
ஆலநிலற் பட்டனுக்கு
என்னைததன் பால் படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புராணம்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவோம்

# திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணநேசா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநி பாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வன்மை கண்டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும் பொழில் திருப்புன் கூருளானே.

# திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
யாரொடு நோகேனார்க் கெடுத்துரைக்கேன்
ஆண்ட நீயருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வென்றருள் புரிவாயே

# திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனே விசையுமா றிசையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மூளாய் க. குமரேசன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஈழத்தின் சிரமெனத் திகழும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் திலகமெனமிளிரும் சீரும் சிறப்பும் வாய்ந்த இளவாலையம்பதியில் அமரர் திரு. ச. கந்தசாமி(அதிபர்) திருமதி தங்கம் (ஆசிரியை) தம்பதிகளின் மூன்றாவது மைந்தனாகவும் அழகேசன் (லண்டன்) குமரேசன் (கொழும்பு) ஆகிய இருவருக்கும் தம்பியாகவும், யுவராணி (திருநெல்வேலி) உமாராணி(கனடா) திலகராணி (கனடா) தணிகேசன் (சுவிஸ்) அருணேசன்(சுவிஸ்) ஆகியோரின் அண்ணனாகவும் இவ்வுலக வாழ்வில் உதயமானார்.

தந்தை தாயாரின் அரவணைப்பிலும், தாதியின் அனுசரணையிலும் இன்புடன் இனிதாக நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வந்தார். அண்ணன்மார் இருவருடனும் விளையாடி, மழலை பேசி மகிழ்வுடன் வளர்ந்து பள்ளிப்பருவமடைந்தார். கண்டி நல்லாயன் மடத்தில் தனது ஆரம்பக்கல்வியை ஆரம்பித்தார். 2ம் வகுப்பு சித்தியடைந்ததுடன் ஆண்களுக்கேயுரிய சென் சில்வஸ்ரர் (கண்டி) கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். ஐந்தாவது வகுப்பு சித்தியடைந்தார். பின் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் தன் கல்வியைத் தொடர்ந்தார். 10ந் தரம்(O/L) சாதாரணதரம், வரை பயின்றார். பின் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியிலும் சேர்ந்து இருவருடங்கள் தொழில் நுட்பங்களில் வல்லுனராய் கற்றுத்தேர்ந்தார். அதே வேளையில் O/L சாதரண தரப் பரீட்சையிலும் சித்தி பெற்றார். மோட்டார் இயந்திர திருத்துநர் தராதரம் பெற்றவர். 1975ல் வவுனியா செட்டிக்குளம் தமிழ் மகாவித்தியாலயத்தில் உலோகவேலை ஆசிரியராக நியமனம் பெற்று ஆசிரிய சேவையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு வருடங்களின் பின் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குத் தேர்வானார். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இரு வருட கல்வியை முடித்து வெளியேறினார். வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் உ_லோகவேலை ஆசிரியராகப்பணி புரிந்தார். அவரது திறமையைப் பார்த்து கல்வி அலுவலகத்திலேயே சகல துறையிலும் பணியாற்றப் பணிக்கப்பட்டார். தன் சேவையை திருப்தியாகவும், சிறப்பாகவும் செய்து எல்லாருடைய அன்பையும், புகழையும் பெற்றுக்கொண்டவர். 1986ல் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு மாற்றம் பெற்று அங்கு கடமையாற்றும் காலத்தில் 1987ல் மூளாயில் அமரர் வேலாயுதம் (ஆசிரியர்) திருமதி மனோன்மணி தம்பதியரின் மகள் ஆனந்தராணியை இல்லறத் துணைவியாக்கி இல்வாழ்வில் இணைந்தார். இல்லற வாழ்வின் பயனாக தரணிதரன், சேந்தரன், வித்தகதரன் என மூன்று ஆண் மக்களைப் பெற்றார். திருமணத்தின் பின் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு மாற்றம் பெற்று தன் சேவையைத் தொடர்ந்தார். அங்கும் அவரது திறமையைப் பார்த்து அலுவலகத்தில் கடமையாற்றப் பணிக்கப்பட்டார்.

பலரது பாராட்டைப்பெற்று தன் கடமையை செவ்வனே செய்தவர். அது மட்டுமன்றி விளையாட்டுப் போட்டிகளில் எல்லாம் முன் நின்று நடத்தி முடிப்பார். காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் இயக்கத் தலைவராயிருந்து பல மாணவர்களை வழி நடத்தி சாரணீயததை வளர்த்த பெருமைக்குரியவர். அவர் சாரணர் உதவி மாவட்ட ஆணையாளராக பதவி உயர்வு பெற்றார. அத்துடன் ஜனாதிபதி விருது பெற்றவர். வலிகாமம் கல்வி அலுவலகத்திலும் திட்டமிடல் உதவியாளர் என்ற பதவி யில் கடமையாற்றினார்.

இவர் தன்னலம் கருதாது பிறர்நலம் கருதி வாழ்ந்த பெருமைக்குரியவர். கருமமே கண்ணாயுடையவர். இறை பக்தியுடையவர். இல்லற வாழ்வில் இணைந்த பின்னும் தன் வாழ்வில் பெரும் பகுதியை சேவைக்கே அர்ப்பணித்த பெருமகன். காலம் தவறாமல் சேவைக்குச் செல்வது, நேர்மை எடுத்த கருமத்தை திறமையுடனும், துணிவுடனும், பொறுமையுடனும் செய்தல் தன்மானம் என்பன இவரது சிறப்பம்சங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தவஞ் செய்வார் தவகருமஞ் செய்வார். மற்றல்லார் அவஞ் செய்வார் ஆசையுட் பட்டு" என்னும் வள்ளுவர் வாக்கிற்கமைய தன வாழ்வைத் தவ வாழ்வாக்கி 47 ஆண்டுகள் இந்த மணணில் வாழ்வாங்கு வாழ்ந்து விக்கிரம வருடம் ஆடிமாதம் 3ஆந் நாள் (2000.07.18) இறைபதம் அடைந்தார். இவர் தன் சேவையில் சாரணர் தலைவராயிருந்து பல மாணவர்களைச் சாரணர்களாக்கிய பெருமை இவருக்கேயுரித்தானது. கல்விச் சேவையிற் சகல துறைகளிலும் சிறந்த சகலகலாவல்லவனாகச் சேவை செய்து சகலரதும் அன்பையும் பாராட்டையும் பெற்றவர்.

மூளாயிலும் இளைஞர் மன்றம், விளையாட்டுக்கழகம் என்பவற்றிலும், சிறந்த பணியாற்றி ஊரார் மதிப்புப் பெற்றவர். ஆலயப் பணியிற் குறைந்தவரல்லர். மூளாய் வதிரன் புலோ விநாயகப் பெருமான் ஆலயத்திற்கே அன்புடன் மனமாரச் சேவை செய்து இறைபதம் அடைந்தமை அவரது இறைபகதிக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

ஆக்கம்
இளைப்பாறிய ஆசிரியை
திருமதி. க. தங்கம்
(தாய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்

பார்த்த மாத்திரத்திலேயே பத்தினியாய் ஏற்று
பதின்மூன்றாண்டுகள் செல்லவில்லை
பாயிற் படுக்காமல் அடுத்தவரைக் கடமைப்படுத்தாமல்
மூவேந்தரான முத்தரன்களையும் என்னையும்
பரிதவிக்கவிட்டுப் பரமன்பாதம்சென்று விட்டீரே ஐயா!
ஆலோசனைக்கும் உதவிக்கும் வழிகாட்டலுக்கும் வரும்
அன்புள்ளங்களுக்கு என்ன பதிலை ஐயா கூற?
உற்றோரும் மற்றோரும் கதறுவது கேட்கவில்லையா?
ஆடிவேல் இரதம் போல் மக்கள் வெள்ளம் புடைசூழ
இறுதி ஊர்வலம் போனது பார்க்கவா? நானிருந்தேன்
பரம பதியே! குடும்பத் தலைவரே!!
விண்ணிலிருந்து நம்மை வழி நடத்துவீராக.

# மூத்த மகன் புலம்பல்

மூந்தரன்களைப் பெற்றெடுத்து எம்மை
அன்புடன் வளர்த்தீர்களே அப்பா!
மூத்தமகன் என்று என்மீது
நீங்கள் வைத்த பாசந் தான் அதிகம்
அரசமாளிகையில் அசர குமாரர்கள் இருப்பது போல்
எம்மை இன்பமாய் வளர்த்தீர்களே அப்பா!

நாம் உலகிற் பல்கலைகளையும் கற்க வைத்து
நீங்கள் கண்ட பகற் கனவுகள் எத்தனையோ!
அத்தனையும் அழித்து விட்டானோ காலனவன்
அக்கனவுகளை உங்களால் எப்படி மறக்க முடிகிறது அப்பா?

எம்மை மட்டும் வளர்க்காது ஊரையும்
உலகத்தையும் அல்லவா வளர்த்தீர்கள் அப்பா!
நீங்கள் செய்த சமூகத் தொண்டுகள் தான் எத்தனையோ?
அத்தனையும் பூர்த்தி செய்ய யார் வருவார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது மகன் புலம்பல்

மூத்தரன்களிலே இரண்டாவதாகப் பெற்றெடுத்துச்
சேந்தரன் என்று அழகாகப் பெயர் வைத்து
தொட்டிலிலிட்டுச்சீராட்டி வளர்த்தீர்களே அப்பா!
என்னை மிக அருமையாக வளர்த்தீர்களே!

நான் கேட்பதெல்லாந் தருவீர்களே!
எனக்கு விளங்காத பாடங்களைச்சொல்லித் தருவீர்களே!
நீங்கள் எங்கு போவதென்றாலும் கூட்டிச் செல்வீர்களே!
துவிச்சக்கர வண்டி வாங்கித்தந்தீர்களே அப்பா!
இப்போது என்னை விட்டுவிட்டுப்போய் விட்டீர்களே!
இனி யான் யாரை அப்பா என்று அழைப்பது?

# கடைசி மகன் புலம்பல்

கண்ணா! கண்ணா,
வித்தகா! வித்தகா
தம்பி! தம்பி! என்றெல்லாம்
நீங்கள் ஆசையாகக் கூப்பிடுவதை
மறப்பது அப்பா எப்படி?
ஆசை மகன் இளைய மகன் நான்
தவிக்கக் காலன் கவர்ந்தது ஏனோ?
பக்கத்திருத்தீச் சாப்பிட வைப்பீர்கள் அப்பா!
குளிக்க வார்த்துக் குளிர்மைப் படுத்துவீர்களே!
வளவு வாய்க்காலெல்லாம் நீர் பாய்ச்சிப்பசுமைப்
- படுத்துவீர்களே!
இத்தனையும் செய்வது யாரப்பா இனி?
நீங்கள் காட்டிய நல்வழியில் நாமும்
நல்லவர்களாக வல்லவர்களாக வாழ்வோமென உறுதி
- பூணுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்கள் புலம்பல்

- ஷாமிலா குமரேசன், ரமேஷ் குமரேசன்

சிறுவயது முதல் எம்மை ஆராட்டி, சீராட்டி
எமக்கு அறிவையும், பண்பையும் புகட்டி
எம்மை நல்வழிப்படுத்திய சித்தப்பாவே!

எம்மை அன்பாய் அழைத்த – அந்த
வார்த்தைகளை இனி எப்போ கேட்போம் சித்தப்பாவே!
சிறந்த ஆசிரியராய், சாரணத் தலைவனாய்
வனப்புடனே நீங்கள் வாழ்ந்த காலங்கள் எத்தனை?
அன்பால் எல்லோரையும் அணைத்து
அறிவால் எல்லோரையும் உயர்த்திட்ட சித்தப்பாவே!
பண்பால் பலர் போற்றிட வாழ்ந்திட்ட சித்தப்பாவே!
இன்று எம்மைத் தவிக்க விட்டுத்தெய்வமாகி விட்டீரே

# மருமகள் புலம்பல்

- செல்வி இ. கார்த்திகாயினி

மாமா நீங்கள் என்மேல் எவ்வளவு அன்பைப் பொழிந்தீர்கள்
இன்று நீங்கள் என்னைத் தவிக்கவிட்டு எங்கோ மறைந்து
-விட்டீர்கள்
இப்படித்திடீரென மறைவதனாலோ என்மேல் இவ்வளவு அன்பைப்
-பொழிந்தீர்கள்
உங்கள் பிள்ளைகளைப்போலவே என்னையும் வைத்திருந்தீர்கள்
இனிநான் 'மூளாய் மாமா என்று யாரை அழைக்கப்போகிறேன்
நான் தனியக் கதிகலங்கி நிற்கின்றேன் – என்னோடு
உங்கள் அன்புச்சகோதரி அம்மாவும், மைத்துனர் அப்பாவும்
கண் கலங்கித் தவித்து நிற்கின்றனர் இனி எமக்கு யார் துணை?
ஆறுதல் சொல்ல யாருமில்லை.

மாமாவின் ஆத்மா சாந்தியடைவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும வீரன் தருமேசன்

இவர் 'முயற்சி திருவினையாக்கும்' என்ற கூற்றிற்கு உதாரணமாகத் திகழ்ந்தார். தாம் எடுத்த கருமத்தை மிகவும் முயன்று செய்து முடிப்பார். அவர் மகாஜனாக் கல்லூரியிலே மேல்வகுப்பிலே கற்றார். அங்கேயே ஆசிரியரானார். அங்கு சாரணர் இயக்கத்திலே ஈடுபட்டார். பின்பு அவர் அந்த இயக்கத்தில் காங்கேசன்துறை மாவட்ட சாரண உதவி ஆணையாளரானார். அதுவன்றி வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் உதவியாளராகக் கடமையாற்றினார்.

விழிசிட்டியைச் சேர்ந்த திரு ச. கந்தசாமி அவர்களிற்கும், இளவாலையைச் சேர்ந்த திருமதி க. தங்கத்திற்கும் மூன்றாவது புதல்வராகத்தோன்றினார். இவருடைய பிதா அதிபர் ஆகவும் மாதா ஆசிரியராகவும் சேவை செய்தார்கள். இவரிற்குச் சகோதரர் எழுவர்.

அவருடைய சேவை புகுந்த ஊராகிய மூளாய்க்கே கிடைத்தது. வதிரன்புலோ ஆலய பரிபாலன சபையின் உப தலைவராகத் தொண்டு செய்தார். இளைஞர் மன்றத்திலும், விளையாட்டுக் கழகத்திலும் சேர்ந்து பணியாற்றினார். அவரது இறுதிக் கிரியையின் போது வெளியான கண்ணீரஞ்சலிகள் அவரது சேவையை எடுத்துக் காட்டின.

இவர் ஆனந்தராணியை மணந்து மூன்று புதல்வர்களைப் பெற்றார். அவரும் புதல்வர்களும் 'புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி இறவாது வாழ்கின்றார் யார்?' என்பதை உணர்ந்து துயர் நீக்கி வாழ்க. திரு. தருமேசன் ஆத்மா சாந்திபெற விநாயகப் பெருமான் திருவருளை வேண்டுகிறேன்.

திரு. இ. நடாசிவாயம்
(பெரியத்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந் தகையாய் வாழ்ந்த பேராளன் அமரர் க. தர்மேசன் அவர்கள்

**'மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்**
**கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே'**

என்று இவ்வுலகுய்ய திருமுறையைத் தந்த திருவருளாளர்களில் ஒருவராகிய ஆளுடைய பிள்ளையின் தேவார திருவருட் பாடலுக்கு ஒப்ப, ***"புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம்"*** என்ற மணிவாசகப் பெருந்தகையின் அருமருந்தனன் கருத்திற்கமைய வலி வடக்காம் தெல்லிநகர் பிறந்து, பெற்றோரின் பேரணைப்பில் வளர்ந்து, பெறுதற்கரிய கல்வியையும் நிறைவுறப் பெற்று, பண்பினில் உயர்ந்த பகுத்தறிவாளனாகத் திகழ்வுறப்பெற்று வாழ்வாங்கு வாழுகையில் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்ற பேரருட் கருத்திற்கிணைய ஆசானாகி அரும்பணியாற்றுகையிற் பெருநிலை கண்டு பட்டமும், பதவிகளும் முட்ட அணைத்தன. அத்தனையையும் மனதார ஏற்ற போதிலும் **"கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்"** என்ற உயர்நிலையும் இறுகத் தழுவி இன்புற்றிருக்கையில் வலிமேற்காம் வளம் பலவும் நிறைவுறவே மிளிரும் மூளாயம் பதியிற் பெண்ணின் நல்லாளைப் பெருமணம் பூண்டு, முத்தான மும்மணிகள் மூன்றினையும் பெற்றுத் தந்து பெருந்தகையாய் வாழ்ந்து வந்தார்.

இந்நாளில் வதிரவன்புலோ சித்தி விநாயகப் பெருமான் பரிபாலனசபை புனர்நிர்மாணம் பெற்றுப் புதுப்பொலிவுடன் மிளிரத் திருவருள் கைகூடியது. இப்புத்தெழிலின் மிளிர்விற்குத் தன்னையும் ஒருவராக அர்ப்பணித்து, எவ்வெவற்றை எந்தெந்த நேரத்தில் எப்படியெப்படிச் செய்யவேண்டுமோ அவ்வவற்றை அந்தந்த நேரத்தில் நிறைவு கொள்ள வைத்த பேராளன் பெருமானின் பெருஞ்சாந்தி திருக்குடமுழுக்குப் பெருவிழாவிலும் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு வகுத்துக்கொண்ட அருளாளன். எம்பெருமான் விநாயகனின் சந்நிதானத்தில் ஒளி சுரக்கும் மின்குமிழ்கள் அனைத்தும் அமரர் அவர்களின் அருள் வடிவத்தைக் காட்டுகின்றன. இத்துறையில் அமரர் அவர்களும், அவரது குழுவினரும் ஆற்றிய சேவை குன்றின் மேல் ஒளிரும் ஒளியாக ஒளிரகின்றது.

என் செய்வது? "யானே பொய், என் நெஞ்சும் பொய்" என்ற திருவாக்கின் ஒருவாசகமான திருவாசகத்தின் அன்பும் பொய்யானதோ! இதுவுமன்றி அமரர் அவர்கள் எல்லாம் வல்ல எம்பெருமானை மானசீகமாக வேண்டும் பொழுதெல்லாம்.

'மாய னேயறி கடல்விட முண்ட
வான வாமணி கண்டத்தெம் அமுதே
நாயி னேன்உனை நினையவும் மாட்டேன்
நமச்சி வாயஎன் றுன்னடி பணியாய்
பேய னாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகிநின் றலறுவ தழகோ
திருப் பெருந்துறை மேவிய சிவனே' என

"என இவ்வாறு வேண்டுவார். இத்தகையாளனை இழந்து தவிக்கும் அருமை மனைவி, உரிமைப் பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர் அமைதியடையவும், அமரர் அவர்கள் எம்பெருமான் திருவடி நிழலுக்கு ஆளாகவும் வேண்டி அமைதியுறுகின்றேன்.

ஓம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

பிரதம அர்ச்சகர்,
சித்திவிநாயகர் தேவஸ்தானம்,
வதிரன்புலோ,
நோர்வே.

இவ்வண்ணம்,
சிவஸ்ரீ ஜெயானந்தசர்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்

அமரர் கந்தசாமி தர்மேசன் அவர்கள் ஆசானாய், திட்டமிடல் உதவியாளராய், சாரணா உதவி ஆணையாளராய், ஏனைய சமூக பணியாளராய் பணிபூண்டு பலரது அன்பிற்கும் மதிப்பிற்கும் ஆளானவர். எடுத்த கருமத்தை இலகுவில் நிறைவேற்றி வைப்பார். தேவைகளை குறிப்பாக அறிந்து உடன் நிறைவேற்றுபவர். பேடன்பவல் அவர்களின் யதார்த்த சிந்தனையைக் கொண்டவர்.

பிற மாவட்டத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி நற்பணியில் மேலுயர்ந்து யாழ் மாவட்டத்திலும் படிப்படியாக அதனை நிரூபித்து வலிகாம கல்வி வலயத்தில் திட்டமிடல் பணிப்பாளருடன் துணைநின்று எமது பிரதேசத்தின் வித்தியாசமான கால கட்டத்தில் எத்தனையோ இடர்கள், துன்பங்கள் அனைத்தையும் உரிய வழிநின்று வென்றெடுத்து கல்வி மேம்பாட்டிற்கு உழைத்தவர். சாரணா உதவி ஆணையாளராய்ப் பணி புரிந்ததோடு திணைக்களத்தில் இத்துறை சார்ந்த சகல செயற்பாட்டிற்கும் பொறுப்பாக நின்று தொழிற்பட்டவர்.

வலிகாம கல்வி வலயத்தில் மேலும் பல கல்விப் பணிகளை ஆற்றவேண்டும். என நானும் திட்டமிடல் பணிப்பாளரும் யோசித்திருந்த வேளையில் சொல்லாமல் கொள்ளாமல் அதிர்ச்சியைத்தந்து அமரராகி வெகுதூரம் சென்று விட்டார்.

சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமரர் அவர்களது வாழ்க்கைப் பாதையில் சந்தித்த அனைத்து நெஞ்சங்கிலும் என்றென்றும் நிறைந்து நிற்பார்.

அவரை இழந்து கலங்கும் குடும்பத்தினர்க்கும் வலயத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

மருதனார்மடம்,
சுன்னாகம்.

வீ. இராசையா
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை விழிசிட்டிக் கிராமத்தை பிறப்பிடமாகவும், மூளாய் கிராமத்தை வதிவிடமாகவும் கொண்ட அமரர் கந்தசாமி. தர்மேசன அவர்களை நீண்ட காலமாக நான் அறிந்திருந்த போதும் தெல்லிப்பளைக் கோட்டத்தில் அவர் என்னோடு கடமையாற்றிய போது அவரிடம் நெருங்கி பழகக் கூடியதாக இருந்தது. அக்காலத்தில் அவர் தெல்லிப்பழைக் கோட்டதிட்டமிடல் உதவியாளராக இருந்து அக்கோட்டத்தின் சகல வளர்ச்சிக்கும் என்னோடு உறு துணையாக இருந்து செயற்பட்டவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் தனது சேவையை செய்தவர். எந்த வேலைப்பழுக்கள் மத்தியிலும் யார் என்ன உதவி கேட்டபோதும் இன்முகத்தோடு அதனை ஒன்று செய்து கொடுக்கின்றவர். தனனிடம் ஒப்படைக்கின்ற எந்தப் பொறுப்பினையும் எவ்வித குறையுமின்றி சிறப்பாக செய்து முடிக்கின்றவர். இவருடைய செயல் திறன்களை அறிந்த கல்விப்பணிப்பாளர் அவர்கள் கடந்த வருடம் தொடக்கம் வலிகாம வலயத்தின் திட்டமிடல் பிரிவுக்கு உதவியாளராக நியமித்தார். அவர் தனது சேவைக்காலத்தில் வலிகாம வலயத்திலுள்ள சகல உத்தியோகத்தரது அன்பையும் ஆதரவையும் பெற்ற ஒருவராக திகழ்ந்தார்.

இவர் காங்கேசன்துறை மாவட்ட சாரண உதவி ஆணையாளராக இருந்து இப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் சாரணர் இயக்கத்தை வளர்த்தவர். அத்தோடு பல சமூக அமைப்புகளிலிருந்து தனது கிராமத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர. இவரது இழப்பு எமது கல்வி வலயத்திற்கும், சாரண உலகிற்கும், சமூகத்திற்கும் பேரிழப்பாகும். அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதுடன் இவரது பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருககு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

A.V. கணேசலிங்கம்
உத.கல்விப்பணிப்பாளர்,
கோட்டக்கல்வி அலுவலகம்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்டவழி அது புகழ்பூண்ட வழி

- கோகிலா மகேந்திரன்

பெருமரங்கள் நிறைவாய் வளர்ந்திருக்கும் தெல்லிப்பளை — அளவெட்டிச்சாலையை விட்டு, உட்புறமாக வடமேற்கே ஒருமைல் தூரம் போனால் வரும் எங்களூர் விழிசிட்டி! அந்த ஊரிலே எல்லோருக்கும் பிடித்தமான ஒரு உயிர், கடுக்கண் போட்ட முதுகு கூனிப்போன கிளவி சின்னக்காவின் இத்தா! அவருடைய மகன் கந்தசாமி மாமாவை நாங்கள் "கண்டிமாமா" என்றே சொல்வதுண்டு. யாழ்ப்பாணத்துக்கு வெளியே கண்டியிலும் வவுனியாவிலும் நீண்டகாலம் தன் ஆசிரிய அதிபர் வாழ்வைச் செலவிட்ட கண்டிமாமா குடும்பம் ஊருக்கு வரும் சந்தர்ப்பங்களில் தான் எங்களுடன் உறவாடும் மாமாவின் பிள்ளைகளெல்லாம் உலகின் பல்வேறு திசைகளுக்கும் சென்றுவிட தெல்லிப் பளையில் ஒரு பற்றுடன் மகாஜனக்கல்லூரிக்கு ஆசிரியராக வந்தார். மாமாவின் மூன்றாவது புதல்வர் தர்மேசன் அன்று முதல் இன்றுவரை — வயதிலே என்னைவிட இளையவர் ஆதலினால் கோகிலா மச்சாள்" என்று அழைக்கும் உரிமைக்குரல் இலேசிலே மறக்கக் கூடியதல்ல.

"இன்றைய காலத்திலிருக்கும் மனிதர்கள்" பலரில் காணப்படாத பல அருங்கணங்கள் தர்மேசனிடம் இருந்தன. அப்பற்றை வழிப்பணிவு இருந்த அதே நேரத்தில்,அதைக் கடந்த ஒரு துணிவும் அவரிடம் இருந்தது. நான் கொழும்புக்கு லீவில் சென்ற போது என் சம்பளத்தை எடுத்து வீட்டில் கொடுப்பதாய்ச் சொன்னவர், நான் திரும்பி வர முதல் அவசரப்பட்டு அகன்று விட்டதை அறிந்தபோது, தீக்குள் விழுந்தது போலத்திணறிப் போனேன். காலன் ஏன் இந்த அநியாயஞ் செய்து விட்டான்? கல்லுளி கொண் டல்லவா எம்மனதிற் காயம் பதித்து விட்டான்.

தன் பதமான உழைப்பாலே பதவிமாறிய தர்மேசன் கொத்தணி அதிபரின் செயலாளராய்ப் புரிந்த சேவை அவரைக்கோட்டத்திற்கு அழைத்ததும், கோட்டத்தில் எல்லாமே தர்மேசனாய் இருந்த நிலை அவரை வலயத் திற்குக் கொணர்ந்ததும் உலகறியும் இன்று.

காற்றுக்கூட வேர்த்துப் போய்க் கனத்து நிற்க, வலயத்தில் அவர் கால் பதித்த இடமெல்லாம் கனவாய்ப் போக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடல் உதவியாளராய் அவர் வீற்றி ருந்த மேசை வெறுமையாகிப்போக

"அரிதாய நின்செயல்கள் அனைத்தும் ஏட்டில் அடங்காதே" என்று கூறி மரியாதை புரிய மட்டுந்தான் முடிகிறது...... எங்களால்

ஊருக்காய் உழைப்பதில் அவருக்கிருந்த நாட்டம் இராணிச் சாரணனாய் அவரை உயர்த்தி எமக்குப்பெருமை சேர்த்தது. ஆனால் ஏங்காதவரும் ஏங்கத் தாங்காத தனிப் பிரிவைச் சாரணர் அனைவருக்கும் தந்து, நீங்காத பெரு நினைவை எங்கள் நெஞ்சங்களில் விட்டகன்று விட்டார்.

செழுங்கனியாய் இனிக்கு முன்னர் ஒளித்துக் கொள்ளப் போகிறார் என்று அறிந்தோ, நாங்கள் தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுனர் போட்டி க்கு அவரைச்சிறப்பு விருந்தினராய் அழைத்தோம். அப் போதும் கூட விரைவாகப் போவேன் என நீ விளம்ப வில்லையே இளமுகிலே? தருவார் இனியார் என்றேங்கித் தவிக்க விட்டு நடந்தாயே தரு!

விழிசிட்டியின் தமிழ் இலக்கியப்பாரம்பரிய ஊற்றுத் தர்மேசனிடமும் காணப்பட்டது. அது பொருத்தமான சந்தர்ப்பங்களில் கவிதையாக வெளிப்பட்டது. கண்டு பெருமைப்பட்டுள்ளேன். ஆனால்

"மடிந்தனையோ தர்மேசா!
மாண்புநிறை மாமணியே,
விடிந்த முகம் காய்ந்ததுவோ
விரிந்த உளம் சோர்ந்ததுவோ
வடிந்த தமிழ் வாயமுதம்
வற்றியதோ மைத்துனரே!

என்று என்னைச் சொல்ல வைத்து அவர் போய் விட்டார். எம் குலத்தின் தூண்டாமணி, நற்றீபம் என்று ஆண்டாண்டாய் நாம் அவரை நினைத்திருப்போம். அவர் நடந்த நீண்ட வழி, புகழ் பூண்டவழி என அமைதி பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயக்கல்வித்திணைக்களம்
மருதனார்மடம்
சுன்னாகம்.

உலக வாழ்க்கையில் உறவும் பிரிவும் தொடர் நிகழ்வுகள், கணத்திற்குக் கணம் நிகழ்பவை, ஆயினும் அவற்றில் ஒரு சில ஆழமான உளப்பதிவுகளை விட்டுச் செல்வன, இறுதிவரை அச்சுவடுகள் மாற்றமின்றி நிலைத்திருக்கும் திரு.தர்மேசன் அவர்கள் முதன் முதலின் 1994ம்ஆண்டு கல்வித்திணைக்களம் வலயம் இரண்டு அலுவலகத்தில் கடமையாற்ற ஆரம்பித்த காலத்தில் சந்தித்து அறிமுகமாகி அத்தொடர்பு வலிகாமம் கல்வி வலய பணிமனையில் ஒருங்கே கடமையாற்றுகையில் மேலும் வலுப்பெற்று உத்தியோகரீதியான தொடர்பாக மட்டுமன்றி தனிப்பட்ட நட்புறவாகவும் பரிணமித்தது.

திட்டமிடற் பிரிவின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் தன் முத்திரை பதித்து அப்பிரிவில் "அவனின்றி அணுவும் அசையாது" என்ற நினைவை ஒவ்வொருவர் மனத்திலும் ஏற்படுத்தி சாரணியக்கோட்பாடுகளை வாழ்க்கையின் ஒவ்வொரு கணப்பொழுதிலும் கடைப்பிடித்து அர்ப்பணிப்புடன் செயற்பட்ட திரு தர்மேசனின் இழப்பு கல்விச் சமூகத்திற்கோர் பொது இழப்பு மட்டுமன்றி அவருடன் பழகிய ஒவ்வொருவரிற்கும் தனிப்பட்ட இழப்புமாகும்.

மனிதர்கள் பிறவியெடுப்பது **"வினைப்பயன் கழித்து நற்கதியெய்தவே"** என்பது இந்துக்களின் நம்பிக்கை இவ்வடிப்படையில் நல்லவர்கள் நீண்டகாலம் உலக வாழ்க்கையில் உழல்வதில்லை. தளைகளை அறுத்து நற்கதியெய்தலிற்கு, உடலை நீத்தற்கு, இயற்கையே காரணம் நல்கும். இறப்பும் பிரிவும் நல்கிய துன்பத்தில் மனங்கவன்ற போதும் அவர் தம் எதிர்பார்ப்புக்களை வாழ்வு நோக்கங்களை நிறைவு செய்வதனூடு அவரது ஆன்ம சாந்திக்குதவுவது அனைவதும் கடமையாகும்.

V. சச்சிதானந்தம்
திட்டமிடல்பிரிவு
வலயம் வலிகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுறாத் தொடர்ச்சி.........

பிரபஞ்சத்தின் எந்தவொரு கூறிலும் இயக்கும் நிகழ்கையில் அங்கோர் தொடர்ச்சி நிலவும். இது இயற்கையின் நியதி. பிரபஞ்ச இருப்பே அதன் அசைவியக்கத்தினால் வெளிப்படுத்தப்படுகையில் அதன் கூறுகளின் தொடரிருப்பு அவற்றின் இயக்கத்தூடு நிலை நிறுப்படுகிறது. மனித வாழ்-விருப்பும், வாழ்-வியக்கத்தின் பிரதி பலிப்புகளால் உணரப்பட்டு நிலைபெறுகின்றது. வாழ்வியக்கத்தின் முடிவல்ல. தொடக்கமும் முடிவுமில்லாத் தொடரியக்கத்தின் ஓர் கண நிகழ்வே. இறப்பும், உயிர்ப்பும் வாழ்வியக்கத்தின் இருவேறு பரிமாணங்கள். இடையறாது நிகழும் இத்தோற்றப்பாடுகளை புலனுணர்ந்து, விளங்க விழைகையில் அதுவே வேறுபட்ட பரிமாணங்களாகப் பரிணமிக்கின்றது.

பிரபஞ்ச பிரக்ஞையுடன நோக்குகையில் “இறப்புப் பிறப்பில்லாப் புண்ணியன்” பரமாத்மா மட்டுமன்று , ஜீவாத்மாவுமே தான். புலன்களால் உணரப்படும் உலகிருப்பு அற்றிடினும், வாழ்வு தொடரும் “பிரபஞ்ச நிகழ்வுகள் எதுவுமே காரணமின்றி நிகழ்வதில்லை. ஆயினும் காரணங்கள் யாவற்றையும் மனிதன் புரிந்து கொள்ளவும் முடிவதில்லை” என்ற அல்பேட் ஐன்ஸ்ரைனின்” கூற்று அனைத்திற்குமே பொருந்தும். எப்போதோ முடிந்த காரியம்” என்ற யோகர் சுவாமிகளின் மகா வாக்கியம் பிரபஞ்ச இயக்கத்தின் தாற்பரியத்தை தெள்ளத் தெளிவாக சுட்டி நிற்கின்றது. தீர்மானிக்கப்பட்ட விதிமுறைகளுக்கமைய இயக்கம் தொடர்கிறது.

திரு. தர்மேசன் என உலகியல் வாழ்வில் அறியப்பட்ட **ஆத்மனின்** உலக வாழ்வியல் பரிமாணம் மாறினும் இருப்பு நிலையானது. உலகியல் வாழ்வில் அவர் தம் வினையாற்றலால் விளைந்த பதிவுகள் அனந்தம். அவ்வுளப் பதிவுகளைச் சுமக்கும் ஒவ்வொருவர் உள்ளளவும் அப்பதிவுகளின் உலகிருப்பும் தொடரும். உலகிருப்பு நிலையில் ஏற்பட்ட சடுதியான பிரிவு எத்தகைய மனக்கவர்ச்சி விளைந்த போதும் உண்மையுணர்ந்து அவர்தம் “வாழ்க்கை நோக்கங்கள்” ஈடேற உழைத்தலே அவர்க்கென ஆற்றக்கூடிய கடமையாகும்.


த. அருணகிரிநாதன்,
திட்டமிடல் உதவியாளர்,
கல்வித்திணைக்களம்,
வலயம் - வலிகாமம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல் வீரன்

உலகில் பிறப்பு என்று உளதோ அன்றே இறப்பு நிச்சயம் என்பதை நாம் தெரிந்து இருந்த போதிலும் இன்றைய உலகில் ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்பதை, நேரில் கண்டும் கேட்டும் இருந்த போதிலும் நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்பதை நன்கு அறிந்திருந்த போதிலும் எமது உறவினர் நண்பர் அன்பிற்குரியோர் இறக்கும்போது எம்மால் வருந்தாமல், வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை. இந்நிலையே அமரர் க. தர்மேசன் அவர்களின் திடீர் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்த பலரில் யானும் ஒருவன். அவருக்கும் எனக்கும் உள்ள தொடர்பு நீண்டகதை. அவரும் யானும் பழகிய தன்மை தனித்துவமானது. அவர் எனது குடும்ப நண்பர் மரணச் செய்தியைப் பத்திரிகையிற் பார்த்தபோது என்கண்களை என்னால் நம்பமுடியவில்லை என்னைப்போல் அவர் வீட்டில் இருக்கும் பகற்பொழுது மிகக்குறைவு யான் அவரை வீட்டிற் சந்திப்பது குறைவு எனினும் அவரது இறப்பிற்கு சில நாள்களின் முன்பு ஒருநாள் அவரது வீட்டிற்குச்சென்ற போது வீட்டு வேலையில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருப்பதைக் கண்டேன். நீண்ட நேரம் இருவரும் உரையாடினோம். அவரது விட்டில் யாருக்காவது சுகவீனம் என்று அறிந்து பார்க்கச்சென்றால் அங்கு தர்மேசனைக் காணமுடியும். மற்றைய நேரத்திற் காண முடியாது.

இன்று அவரை இழந்து சோடிழந்த அன்றிலைப்போல் துயர வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் அவரது துணை வியாரை, ஏதும் அறியாத நிலையில் வருந்தும் பச்சிளம் பாலகரான அவரது கண்மணிகளை சோகமே உருவாகக் காட்சி கொடுக்கும் அவரது உறவினரை நல்ல சமூகத் தொண்டனை இழந்து வேதனைப்படும் அயலவர்களை எங்ஙனம் தேற்றமுடியும்? அவர்களுக்கு எவ்வாறு ஆறுதல் கூறமுடியும்? விடை தெரியாத நிலையில் அவர்களுடன் சேர்ந்து யானும் வேதனைப்படுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஒரு செயல் வீரன் சொல்வதிலும் பார்க்கச் செயலிற் காட்டும் தீரன் மேலதிகாரிகள், நண்பர்களின் பணிகளை உரிய நேரத்திற்கு முன்பே செய்து கொடுப் பதால் அவர் ஒரு வீரன். எந்நேரமும் சுறுசுறுப்புடன் இயங்குவார். சோம்பி இருப்பதை ஓய்வு எடுப்பதை அறியாதவர். அமரர் பல்துறை விற்பன்னர். அவருக்குத் தெரியாத துறைகள் இல்லை எனலாம். ஒரு வேலையை நம்பி அவரிடம் ஒப்படைக்கலாம். மேற்பார்வை - தூண்டல் தேவையில்லை திறம்பட உரிய நேரத்திற் செய்து முடிக்கும் செயல்வீரன்.

சாரணர் துறையில் உயர விருது பெற்ற ஒரு சமூகத் தொண்டன்.

அன்னாரை இழந்து தவிக்கும் உற்றார் உறவினருடன் யானும் பங்கு கொள்ளுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ச. விநாயகரத்தினம்
ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்
யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப்புலத்தில் ஒரு கனவான் தர்மேசன்

18.07.2000 செவ்வாய் அதிகாலை தர்மேசன் இறந்துவிட்டார் என்ற செய்தி பரவுகிறது. யார்? எங்கள் தர்மேசனா? ஐயையோ! எங்கள் தர்மேசன் இறந்து விட்டாரா எப்படி இறந்தார். என்ன நடந்தது எம்மால் நம்பமுடியவில்லையே! என்று சொல்லித்திகைக்காத உள்ளங்களே இல்லை. கல்விப்புலத்தில் கலங்காதவர்களே இல்லை. மூளாய்க்கு தர்மேசன் வீடு நோக்கி விரையும் சனக்கூட்டம் வீதிகளில் கண்ணீர் அஞ்சலி விளம்பரங்கள், வாழை தோரணங்கள், சாரணர்களின் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரின் அணிவகுப்பும் வழிகாட்டல்களும் வளாவு கொள்ளாது. துயரம் தாங்க முடியாது கண்ணீர்விடும் மக்கள் அலை மோதுகின்றனர். "இறைவா" இப்படியும் ஒருநிலையா என்று ஏங்காத நாளில்லை அடிக்கடி கண்ணீர் அஞ்சலிகள் கட்டுக்காட்டாக விநியோகமாகின்றன. கல்விக்கோட்டங்கள், வலயங்கள், சனசமூக நிலையங்கள், சமய நிறுவனங்கள், விளையாட்டுக்கழகங்கள், தனிப்பட்ட நண்பர்கள். நலன் புரிக்கழகங்கள், சாரணர் அணிகள் என்று அளவிட முடியாத அஞ்சலிகள் அத்தனைபேரையும் அதிர வைக்கின்றன.

எங்கள் கல்விப்புலத்தில், சமூகத்தில் எத்தனை எத்தனை விளையாட்டு விழாக்கள், தமிழ்த்தின விழாக்கள், கண்காட்சிகள், சமயவிழாக்கள், ஊர்வலங்கள், சாரணர் ஜம்போரிகளை முன்னின்று நடத்திய தர்மேசனுக்கு இன்று வானுலகுக்கு வழியனுப்பும் வைபவம் நடக்கிறது. யாருமே விரும்பாத வைபவம், ஒருவரைப்பார்த்து ஒருவர் மௌன மொழிகளால் கண்ணீர்சொரிந்து கவலைக்கடலுள் தத்தளிப்பதைவிட யாராலும் வேறு எதைத்ததான் செய்ய முடியும்.

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கதுடைத்து"

என்ற வள்ளுவன் சொல்லுக்கேற்பத் தன்னைத் தெரிந்தார் அனைவரும் துயர் கொண்டு நீர மல்க வானுலகடைந்த தர்மேசன் பெற்றது பெரும்பேறு. ஆனால் அவரை இழந்த நாம் பெற்றது ஆறாத சோகம் மாறாத துயரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970வது களில் வவுனியாவில் நல்ல அதிபராயிருந்த பெருஞ் சேவையாளன். இன்று வவுனியா நகரில் தலைநிமிர்ந்து நிற்கும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் எழுச்சிக்கு உரமிட்டு உழைத்த உத்தமர் கந்தசுவாமி மாஸ்ரரையும், நல்லாசிரியை செல்லப்பிள்ளை அக்காவையும் பெற்றோராகப் பெற்றுப்" பெற்றார் அறிவு பிள்ளை அறிவு" என்ற பொன் மொழியைப் புதுப்பித்த பெருமைக்குரிய தர்மேசனுடன் இணைந்து இருபது ஆண்டு களுக்கு மேலாகக் கல்விப்புலத்தில் சேவை செய்தவன் என்ற வகையில் என்னுள்ளத்தில் உயர்ந்த இடத்தில் இருப்பவர் தர்மேசன். தந்தையின் பணியையும், தந்தை வழிமைந்தனின் பணியையும் உடனிருந்து கண்டு மகிழ்ந்துள்ளோன்.

ஆழமான விடய அறிவு, பழுத்த அனுபவம், அடக்கமான அணுகுமுறை, எளிமையான பழகுமுறை, எவர்க்கும் உதவும் மனப்பாங்கு, எதனையும் உடனுக்குடன் செய்து முடிக்கும் திறன், செய்வன திருந்தச்செய்யும் செயல்திறன், மற்றவரை மதிக்கும், பண்பு, கடின உழைப்பு, எந்தப் பணியையும் எதிர்கொள்ளும் தயார்நிலை, இத்தனைக்கும் இருப்பிடமான அபூர்வப் பிறவி தர்மேசன் என்பதில் எவர்க்கும் ஐயம் இருக்காது. எந்தவேளையிலும் நடுநிலை தவறாத, நேர்மை தவறாத, தர்மம் தவறாத கண்ணியம் மிக்கவர். இவர்சோர்வு காணல் அரிது.

கல்விப் புலத்தில் கொத்தணி உருவான காலம் முதல் வலயம் வழமைக்கு வந்த இன்றைய கால கட்டம் வரை அம்பனைக் கொததணியில் தொல்லிப்பழைக் கோட்டத்தில் வலிகாம வலயத்தில் தர்மேசனை அறியாத மாணவர் கூட இல்லை.

தர்மேசன் ஒரு சுமை தாங்கி என்று நாம் சொல்வோம் அவன் மனதில் வைத்ததெல்லாம் வைத்தபடி இருக்கும். எவ்வளவையும் வைக்கலாம். எப்பவும் எடுக்கலாம். இப்போதைய பாணியில் சொல்வதானால் அவர் ஒரு "கம்பியூட்டர்" என்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழைக் கோட்டத்தில் இடம் பெயர்வு ஏற்பட்டு எண்ணில்லாத இழப்புகளும், அவலங்களும், ஆற்றாமை களும் ஏற்பட்ட காலத்தில் இக்கோட்டத்தை உருக்குலைய விடாமல் கட்டிக்காத்த பெருந்தகைகள் சிலருள் இவர் முதன்மையானவன் என்பதை அதிபர் சங்கத்தலைவர் என்ற வகையில் நான் உறுதியாகச் சொல்லமுடியும் தெல் லிப்பழைக் கல்விக்கோட்டத்தின் வரலாற்று நாயகன் தர்மேசன் என்பது வரலாறு மறக்க முடியாத உண்மை.

சொல்லில் அடங்காத தூயபணியாளன் தர்மேசனின் பெருமையை வார்த்தைகளால் வடிக்க முடியாது. உள்ளத்து உணர்வுகளால் என்றும் நினைந்து போற்ற முடியும் .

"பிறர்பிள்ளை தலைதடவத் தன்பிள்ளை தானே வளரும்" என்றபொன் மொழிப்படி பிற பிள்ளைகளுக்காகச் சந்தனம் போல் தான் தேய்ந்து முழு நேரமும் பிறர்க்காக வாழ்ந்த தர்மேசனின் தர்மம் அவர் பிள்ளைகளைப் பெருமைக்குரியவர்களாய் வாழவைக்கும் அவர் புகழ் அவர் குடும்பத்தின் புகழாய் நிலைத்திருக்கும்.

முதல் புதன்கிழமை வதிரன்புலோ விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகத்திற்கு எம்மைக்குடும்பமாய் வரவழைத்து அங்கு பேச வைத்து உன் வீட்டில் உன் குடும்பத்தாருடன் விருந்துபசாரம் செய்து அனுப்பிவைத்த நண்பா! தர்மேசா! அடுத்த புதன்கிழமை உங்களை வானுலகுக்கு வழியனுப்பி வைக்கும் நிலைக்கு ஆளானோமே இத்துயரை எப்படித் தாங்குவோம். விதியை யார் அறிவார்.

சைவப்புலவர் சு. செல்லத்துரை
ஓய்வுபெற்ற அதிபர்
இளவாலை மெய்கண்டான் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KANKESANTHURAI DIOSTRICT SCOUT BRRANCH ASSOCIATON**

# காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கம்

### "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"

ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பைத் தருவதால், அவ்வொழுக்கம் உயிரைவிட மேலானதாகப் பேணிக் காக்கப்படும் என்னும் வள்ளுவரின் வாக்குக்கு அமைய, ஒழுக்க சீலனாகவும், கடமை வீரனாகவும் திகழ்ந்த அன்புக்கும் பண்புக்கும் உரிய கந்தசாமி தர்மேசன் அவர்கள் எங்கள் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டுவிட்டார்.

"எதற்கும் தயார்" என்ற சாரணிய தாரக மந்திரத்திற்கு அமைய அவர்கள் எச்சந்தர்ப்பங்களிலும், எந்த நேரத்திலும் காங்கேசன்துறை மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தோளோடு தோள்நின்று செயற்பட்ட பெருந்தகை. அவர்தம் நேரத்தைப் பொன்னாக மதித்து, காலத்தைக் கனிவுடன் பண்பான தொழிற்பாடுகளிற் செயற்படுத்துவார். மத வைபவங்களில் முன்னின்று பொறுப்புணர்ச்சியுடன் செயற்படும் வீரன். பொறுப்பு என்ற கடமையைக் கண்போன்று பாதுகாத்துச் செயல் ஆற்றுவார்.

இப்பெருந்தகையின் மறைவையொட்டித் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துன்பத்திலும் பங்கேற்று, அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

ந. சௌந்தரராசன்
சாரணமாவட்ட ஆணையாளர்
காங்கேசன்துறை மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரணச் செம்மல்

## அமரர் திரு கந்தசாமி தர்மேசன் அவர்களின் அமரத்துவம் குறித்த இரங்கற் செய்தி

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனப்படும் சாரணியப் பண்புகளின் சொரூபமாக சிறந்து அதற்காக தன் சித்தம், சொத்து, சீவன் என்ற முப்பொருள்களையும் முழுமையாக அர்ப்பணித்து உயர்ந்தவர் திரு. கந்தசாமி தர்மேசன் அவர்கள். ஊர் அறிந்த உத்தமர் அவர். பிறந்த வீடு, புகுந்த வீடு இரண்டும் அவரால் பொலிவுபெற்றன. பெருமை கொண்டன. தன்நலம் இன்றி பிறர்நலம் நாடும் பெருந்தகை அவருக்கே உரிய அணிகலன். சமயசேவை, சமூகசேவை, கல்விச்சேவை விளையாட்டுக் கலைச்சேவை என சமூகம் அவரிடம் பெற்ற பங்களிப்புக்கள் பலவகைப்படும்.

அகவு நாற்பதுகள் நிறைகின்ற காலத்திலும் சமூகம், தன்குடும்பம் இந்த இரண்டு இடத்திலும் அயராது உழைத்து உயர்ந்து வந்தவர். காலத்தின் கோலம், உழைப்பின் ஊதியத்தை, அதன் உத்தம நிலையை அவர் அடைவதன் முன் இறை உலகில் அவருக்கு இருக்கை அமைத்து விட்டான் ஆண்டவன்.

இன்று அவர் இங்கில்லை. என்றும் அவர் புகழ் இங்கிருக்கும். குன்றாத புகழே மனிதன் மண்ணில் கண்ட மாபெரும் சொத்து. சொந்தம் என்ற நீர்மையாலும் நட்பு என்ற சீலத்தாலும் என் சித்தத்தை தன்னிடம் சிக்க வைத்தவர் அமரர். அவரது ஆத்ம சாந்திக்கு என்றும் பிரார்த்திக்கும் என் இதயம் அவரது இனிய குடும்பத்தாருக்கு இன்று தன் இரங்கலை மனம் தாளாது சமர்ப்பிக்கின்றது.

**வருவதும் போவதும் வையக வழக்கு** என்ற சப்தம் எமது சித்தத்தை சாந்தமாக்கட்டும்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

தி. சிவதட்சணாமூர்த்தி
உதவி இயக்குனர்
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை உபதலைவராக சேவையாற்றி, சிவபதப்பேறு அடைந்த அமரர் கந்தசாமி தர்மேசன் அவர்களின் இழப்பினைக் குறித்த ஆத்ம சாந்திப்பிரார்த்தனை

எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் பாராட்டுக்களுக்கும் உரிய "தர்மேசன் மாஸ்டர்" என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட அமரர் கந்தசாமி தர்மேசனின் திடீர் மறைவு எம்மையெல்லாம், ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டது.

மக்கள் சமுகத்தை நேசித்து நற்பணி ஆற்றியவர் இப்பெரியார். பெரியார் என்று கூறுவதைவிட தோழர் என்றே அழைக்கலாம். "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற பொன்மொழிக்கேற்ப வாழ்க்கையை பயன்பட மக்கள் சேவையில் தோளோடு தோள் நின்று மகிமை பெற்றவர்.

எங்கள் கிராமத்தின் கண்போல் விளங்கும் மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகரின் அரிய பக்தி கொண்ட அடியவரான இவர் நிறைந்த ஈடுபாட்டுடன் காலமும், இடமும் அறிந்து பண்பானவராக விளங்கினார். இவ்வாலயத்தின் மஹாகும்பாபிஷேகம் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற வேண்டும் என்று அயராது உழைத்த உத்தமனாவார்.

அன்னாரின் மறைவு எம்மால் தாங்க முடியாத நிகழ்வ என்றாலும் அதனை சகித்துக்கொண்டு அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிராத்தித்து அவரை இழந்த சோகத்தில் ஆழ்ந்திருக்கும் மனைவி, மக்களுக்கு எமது அனுதாபங்களை "கண்ணீர் அஞ்சலி" ஆக்குகின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தானம் பரிபாலன சபை**
**06.08.2000**

**க. செல்வராசா**
**செயலாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் இரங்கற் செய்தி

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற பொய்யா மொழிப் புலவர் வள்ளுவரின் வாக்குக்கிணங்க வாழ்ந்து இறைவன் திருவடி சேர்ந்துள்ளார் அமரர் கந்தசாமி தர்மேசன் அவர்கள்.

இவர் எமது மன்றத்திற் போஷகராகவும், சிறந்த ஆலோசகராகவும் இருந்து எமது மன்றத்தைச் சிறப்பாக வழிநடத்தியவர் இவரது இழப்பு எமது மன்றத்திற்குப் பெரிய இழப்பாகும்.

எம்மை விட்டுப் பிரிந்த அமரர் கந்தசாமி தர்மேசன் அவர்கள் பண்பாக, அன்பு வார்த்தைகள் கொண்டு அழைத்த நாட்களை நினைவு கூருவதா, இவர் அன்பு மனைவி, பாசங்கொண்ட பிள்ளைகளுடன் வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்க்கைத் திறனைப் பற்றிக் கூறுவதா, சமூகத்திற்கு ஆற்றிய சேவையைக் கூறுவதா, சமயத்திற்கு ஆற்றிய தொண்டுகளைக் கூறுவதா? வார்த்தைகள் தான் நீண்டு கொண்டே போகும்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் முத்துக்குமாரசுவாமி திருவடிகளை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம்சாந்தி !!!

**மூளாய்**
**சுழிபுரம்**

**மூளாய் இந்து இளைஞர் மன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இதயத்திலிருந்து அரும்பணியாற்றிய ஆசிரியர் அமரர் கந்தசாமி தர்மேசன் அவர்கள்

"என்கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் பெருவாக்கிற்கு அமைய கல்வி கேள்விகளில் வல்லவராய், அன்பு பண்பு மிக்கவராய் ஆசிரிய இலட்சணங்கள் உடையவராய், யாவரது உள்ளத்திலும் இடம் பெற்றவராய், மாணவர்களின் மனதைக் கவர்ந்தவராய், கலை கலாசாரங்களை அறிந்தவராய், அதனை நன்கு உணர்ந்தவராய், பாலைக்கு என்றும் இனியவராய் எம் மனக்கண்முன் என்றும் வருபவராய் இருப்பவர் அமரத்துவமடைந்த ஆசிரிய ஜோதி தர்மேசன் ஆசிரியர் அவர்கள்.

எமது மூளாய்க் கிராமத்தின் இளைஞர் யுவதிகளின் உடல் உள வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கு ஒரு நிர்வாகக் கட்டமைப்பு வேண்டும் எனத் தர்மேசன் ஆசிரியர் அவர்களோடு கலந்து ஆலோசித்த போது அதற்கு ஒரு விளையாட்டுக் கழகம் அமைப்பது தான் நல்லது எனக்கூறி, அதனை மூளாய் இந்து இளைஞர் மன்றத்தினைத் தாய்ச் சங்கமாக வைத்து 1997.05.08 அன்று "உதயசூரியன் விளையாட்டுக் கழகம்" என ஆரம்பித்து அதன் தலைவரா-கப் பதவியேற்றார்; கழகத்திற்கு வேண்டிய அமைப்பு விதிகளை எல்லாம் தயாரித்து கழகத்தின் வளர்ச்சியே தனது இலட்சியமாகக் கொண்டு சேவையாற்றி, தற்போது உபதலைவராக இருந்து எம்மையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கும் போது திடீர் நோயுற்று மரணச் செய்தி கேட்டு மிகுந்த மன வேதனையடைந்தோம்.

இப் பெரியார் இக் கிராமத்தின் கண்போல் விளங்கும் மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகரின் அரிய பக்தி கொண்டவர். இவர் இக் கிராம வளர்ச்சியிலும், அபிவிருத்தி-யிலும் கடமையாற்றிய கர்மவீரர் ஆவார். அன்னாரின் மறைவு எமது கிராமத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவாற் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகப் பெருமானைப் பிரார்த்திக்-கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"உதய சூரியன் விளையாட்டுக்கழகம்" மூளாய், சுழிபுரம் — கா.பார்த்தீபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னலமுற்ற தொண்டன்

"தோன்றிற் புகழொடு தோன்றுக"

பதினைந்து ஆண்டுகட்கு முன்பு வவுனியாவில் புலமைப்பரிசிற் பரீட்சை மேற்பார்வையின் போது அமரர் தர்மேசன் அவர்களை முதன் முதலில் சந்தித்தேன். நான் பிரதம மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய போதும், அமரர் அவர்களே சகல செயற்பாடுகளுக்கும் வழிகாட்டி எனது கடமையைச் சிறப்புற நிறைவு செய்ய உதவினார். அன்றே அவர் தம் அறிவு, ஆற்றல், அநுபவம், சேவை மனப்பான்மை என்பவற்றை நன்கு அறிந்துகொண்டேன்.

பின்பு மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபராக நான் கடமையேற்ற காலத்தில் எங்கள் பாடசாலைக்கு அண்மையிற் குடியிருந்த அமரர் அவர்கள் பாடசாலைச் சமூகத்தில் இணைந்து கொண்டார். அவர்தம் சேவை மூளாயின் மூலை முடுக்கெல்லாம் செறிந்தது. மூளாய்க் கிராமத்தின் சகல மன்றங்களிலும் பொறுப்பான பதவிளை வகித்துத் திறம்படச் செயற்படுத்தி வளம் பல கண்டார்.

எமது பாடசாலையைப் பொறுத்த மட்டிலும் எந்நேரமும் எம் செயற்பாடுகளில் மனமுவந்து பங்கு கொண்டு ஆலோசனைகள் வழங்கி ஊக்கமளித்து வந்தார். வலய பாடசாலைத் தொடர்புகளை இலகுவாக்கி நாளாந்தம் உதவிகள் புரிந்தார். ஒரு வருடம் தான் பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளராகப் பணி புரிந்தார். ஆனால் எந்நேரமும் எமது பாடசாலையின் விருத்தியிலே கண்ணுங்கருத்துமாக இருந்தார்.

புலமைப் பரிசிற் பரீட்சையிலே தமது மகன் சித்தியெய்தியதனை முன்னிட்டுப் பாடசாலையின் உறுப்பினர்கட்கு தேநீர் விருந்துபசாரம் நடாத்தி அன்பளிப்புகள் வழங்கியது மட்டுமன்றி இப்பாடசாலையிலேயே தொடர்ந்து படிக்க வேண்டுமென உறுதியுடன் கருத்துவெளியிட்ட முற்போக்குவாதியாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகக் கடமைகள், சாரணியத்துறைச் செயற்பாடுகள், விளையாட்டு போன்ற பலதுறைகளிலும் தமது பெயரைப் பதித்துக் கொண்ட செம்மல். இத்தகையதொரு சேவையாளனை, பல்துறை வித்தகனை நாம் காண்பது அரிதிலும் அரிது. இவரது இழப்பு அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல எமது பாடசாலைக்கு, கிராமத்திற்கு, கல்வித் திணைக்களத்திற்கெல்லாம் பேரிழப்பாகும்.

அதிர்ச்சி தரும் வகையில் பூதவுடன் நீத்து புகழுடல் எய்திய தர்மேசன் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

*திருமதி. ஏ. சோதிலிங்கம்*
*அதிபர்*
*யாழ்/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டின் தோழர்

அமரத்துவம் அடைந்த பண்பாளர் திரு.க.தர்மேசன் ஆசிரியர் அவர்கள் அன்பு, அமைதி, அடக்கம், வாய்மை, நேர்மை, அறிவுடமை, ஆரவாரமற்ற செய்திறன் அனை- வரையும் கவரும் புன்சிரிப்புடன் கூடிய தொண்டுகள் ஆன்மீக ஈடுபாடு எனப் பல நல்லியல்புகளைத் தன்னகத்தே கொண்ட மாண்பு மிக்க சீராளனாவார்.

வளரும் பயிரை முளையில் தெரியும் என்ற முதுமொழிக்கிணங்க சிறு பிராயத்திலிருந்தே புத்திக்கூர்- மையும், நற்பண்பும், பெயருக்கேற்ற தருமசிந்தனையும், சீலமும் கொண்டிலங்கினார். மாணவப் பருவத்திலும், ஆசிரியத் தொழிலும் தன் திறனை முதன்மைப்படுத்திக் கொண்டார். இவரின் திறமையினை இனம் கண்ட கல்விப்புலம் கொத்தணி, கோட்ட அமைப்பில் உதவித்திட்ட- மிடுபவராகவும் அமர்த்திப் பெருமை பெற்றது.

தான் பிறந்த கிராமத்திலும், புகுந்த கிராமத்திலும் நற்தொண்டுகள் பல ஆற்றி சமூகத்தின் மத்தியில் ஈடற்ற உயர்வு பெற்ற உத்தமர். பாடசாலை நிகழ்வுகள், இளைஞர் நிகழ்வுகள், மக்களின் இன்ப துன்பங்களிலும் பங்கு கொண்டு மக்கள் மனம் கவர்ந்த பெருமகன். சாரணிய உதவி மாவட்ட ஆணையாளராக இருந்து யாழ் மாவட்ட அனைத்து மாணவச் செல்வங்களும் சமூக உயர்வு பெற அரும் பணி ஆற்றிய அண்ணல்.

மனை நோக்கி வருபவர்களுக்கு இன்முகத்தோடு உபசரிப்பதிலும் மனைவி மக்களோடு தானும் இணைந்து கொள்வார். எல்லாவற்றுக்கும் மேலாக இல்லத்துக்கருகே அமைந்துள்ள ஆலயங்களான வதிரன்புலோ சித்திவிநாயகர் மீதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமுத்துக்குமாரர் மீதும் அளவற்ற இறைபக்தி கொண்டி லங்கினார். மூளாய் வதிரன்புலோ சித்திவினாயகர் பரிபாலன சபையின் உபதலைவராக இருந்து அக்கபூர்வமான ஆலோசனைகள் வழங்குவதிலும் திருப்பணிகள் ஆற்று வதிலும் வல்லவராகத் திகழ்ந்தார். அண்மையில் நடந்த மகா கும்பாபிஷேக குடமுழுக்கின் போது அவர் ஆற்றிய அருந்தொண்டுகள் இன்றும் நெஞ்சில் நிறைந்து நிற்கின்றன.

நல்லவர் நீடு காலம் வாழ பூவுலகம் உவப்பில்லை என எண்ணியதாலோ இறைவன் விரைந்து தன்னுடன் இணைத் துக் கொண்டான் போலும்!

தொண்டிற் சிறந்த அமரரின் ஆன்மா சாந்தி பெற மனைவி, மக்கள், சுற்றத்தாருடன் இணைந்து எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

வி.தனலிங்கம்
(இளைப்பாறிய அதிபர்)
மூளாய்
சுழிபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உள்ளத்தில் உறைந்திட்ட உத்தமன்"

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துளெல்லாம் உளன்"

என்பது வள்ளுவர் வாக்கு

சைவமும், தமிழும் கமழும் தெல்லிப்பழையில் பிறந்து மூளாயில் அன்பும், அடக்கமும் நிறைந்த குடும்பத்திற் திருமணம் செய்து, நன்மக்களைப் பெற்று நாடு போற்ற வாழ்ந்த கந்தசாமி தர்மேசன் அவர்கள் எனது சிறந்த நண்பன். இவர் தனது உயர்ந்த பண்பால் உலகத்தில் நன்மதிப்புப் பெற்றவர். இவர் தனது இலட்சிய வாழ்க்கையால் என்னைக் கவர்ந்து கொண்டார். தான் எடுத்த கருமத்தைச் சிறப்புற நடாத்தி அதில் வெற்றிகாணும் காரிய வேட்கை கொண்டவர்.

எந்தவொரு கருமத்தைச் செய்யினும் திட்டமிட்டுச் செய்யும் ஆற்றல் கொண்டவர். எடுத்த கருமத்தைச் செய்யும் போது சலிப்போ, களைப்போ இன்றி முழு மனதோடு கருமமாற்றி திறமை கண்டவர்.

பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்ட இவர் உலகம் இன்புற்றிருக்க வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கம் கொண்டவர்.

இதனால், இவர் நல்லாசானாய், கொத்தணி உதவி யாளராய், உதவித்திட்டமிடல் அலுவலராய், கல்வித்துறையில் துடிப்புடன் செயலாற்றியதோடு, சாரணியத்துறையில் உதவி மாவட்ட ஆணையாளராகவும் தொண்டாற்றிய பெருமகன். தொழில்நுட்பத்துறையில் இவருக்கிருந்த அறிவும், ஆற்றலும் போற்றுதற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நவில் தொறும் நூல் நயம் போலும்
பயில் தொறும் பண்புடையாளர் தொடர்பு"

எனும் வள்ளுவர் வாக்கிற்கமைய இப்படியான பல்வகைச் சிறப்புக்களும், உயர்ந்த பண்புகளும் கொண்ட தர்மேசனின் நட்பு எனக்கும், எனது குடும்பத்தினருக்கும் மிகவும் உன்னதமாக விருந்தது. அவரது திறமைகளையும், பண்பையும் என்றும். எம்மால் மறக்கவியலாது. இறப்பு நிச்சயம் என்பது உண்மையே. அந்த விதியை வெல்ல யாரால் முடியும்.

உத்தமன், நண்பன் தர்மேசனும் அந்த விதிக்கு உட்பட்டு விட்டார்.

நல்லவர்களை இறைவன் இவ்வுலகில் நீண்டகாலம் வாழ விடமாட்டான் என்பது உண்மையாகிவிட்டது.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

என மன ஆறுதலடைவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறையருளைப் பிரார்த்தித்து அமைகின்றோம்.

தி. யோகரத்தினம் குடும்பத்தினர்

தெல்லிப்பழை
10.08.2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் பதித்த வாழ்வு

கந்தசாமி தர்மேசன் - சமூகத்தின் சாக்கடை நீரோட்டத்தினால் அடித்துச் செல்லப்படாமல் எஞ்சியிருந்தவர்களில் இவரும் ஒருவர். இவரது சிந்தனையும் செயற்பாடும் எப்பொழுதும் தனித்துவமானது. இப்பூவுலக வாழ்வில் பத்துடன் பதினொன்றாக வாழ்வதை என்றுமே விரும்பாத மனிதன். இவரது சமூகவாழ்வின் எந்தக் காலகட்டத்திலும் மனிதாபிமானம் கலந்திருக்கும். சமூகசேவையில் இவரது சிந்தனை இளமையானது. இதற்கு செயல் வடிவம் கொடுக்க அயராது உழைத்தவர். இந்த உழைப்பு சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்று மனமார நம்பியவர். புனிதமான சாரணியக் கொள்கையினால் கவரப்பட்டவர். தனது வாழ்வின் இறுதிவரை நெறிபிறளாமல் சாரணியத்தைப் பின்பற்றியவர். இதனால் பொது வாழ்வின் அத்தனை அம்சங்களிலும் இவரால் அழியாத தடம் பதித்துக் கொள்ள முடிந்தது. இவரது மறைவு ஜீரணிக்க முடியாத ஒன்று. ஈடுசெய்ய முடியாத இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எனது இதயபூர்வமான அனுதாபங்கள். அன்னாரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!**

*க. கணேசலிங்கம்*
*கிராம உத்தியோகத்தர்*
*மூளாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட மகத்தான மனிதன்

எனது நண்பன் அமரர் கந்தசாமி தர்மேசன் ஆசிரியர் அவர்கள் இவ்வுலகை நீத்தமையிட்டு அவரோடு உறவாடிய எனது நினைவுகளை அவர் தாள்களுக்கு அஞ்சலி ஆக்குகின்றேன். **பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் என்றோ ஒருநாள் இறக்கின்றான் இது நியதி** எனினும் அவன் இப்படித்தான் வாழ்ந்தான் என்பதை விட எப்படிவாழ்ந்தான் என ஒவ்வொருவரும் சிந்திக்கின்ற போது தான் அவனது புகழ் உடம்பும் எம்மோடும் நிலைத்து நிற்கின்றன.

அமரர் தர்மேசன் ஆசிரியரின் மைத்துனரான வே.கருணாகரனுடன் சிறுவயதிலிருந்தே பாடசாலை ரீதியான தொடர்புகளினால் அவர்கள் குடும்பத்தோடு அவர்கள் அன்பினால் பிணைக்கப்பட்டிருந்த எனக்கு தர்மேசன் ஆசிரியர் அவர்களது தொடர்பு மிகுந்த உறவு இறுக்கத்தை தந்தது. அமரர் தர்மேசன் அவர்கள் **மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர்** என்ற பதவியில் இருந்த போது நான் பழைய மாணவர் சங்கத் தலைவர் என்ற வகையில் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. இக்காலப் பகுதியில் தான் இவருடைய திறமைகளையும், நற்செய்பாடுகளையும் கண்டுகொண்டேன் இது மட்டுமல்லாமல் மூளாய் இந்து இளைஞர் மன்றத்தில் ஒரே காலத்தில் போசகர்களாகவும், அமரர் தர்மேசன் அவர்கள் மூளாய் உதயசூரியன் விளையாட்டு கழகத்தை ஸ்தாபித்து அதில் தலைவராக இருந்தபோது நான் உபதலைவராகவும் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையில் உபதலைவர்களாக இருந்த காலப்பகுதியில் தர்மேசன் ஆசிரியர் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இக்காலங்களில் இவரது தனிமனித ஆளுமைகளையும் முகம் கோணாது கருமம் ஆற்றும் நற்செயற்பாட்டையும் தெரிந்து கொள்ள முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கோட்பாட்டை முன்னெடுத்து அதன்படி ஒழுகியவர் ஆசிரியர் அவர்கள். ஆசிரியர் அவர்களிடம் பரந்த மனப்பான்மையை எதிர்பார்க்கலாம், ஆசிரியரை எமது ஊருக்கு **"வராது வந்த மாமனிதன்"** என்றே கூறலாம்.

தொழில் ரீதியாக இவர் ஈட்டிய சாதனைகள் ஏராளம். சாரணிய இயக்கத்தில் உயர்பதவியில் இருந்து திறம்படக் கடமையாற்றி ஜனாதிபதி விருதினைப் பெற்றுக் கொண்டவர். தான் பெற்றது போன்ற இவ்விருதுகளை தம் பிள்ளைகள் மட்டுமன்றி எமது ஊரில் வாழும் சாரணியர்களும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு வழிகாட்டியாய் தோளோடு தோள்நின்று உழைத்து தூரதேசம் வரை அழைத்துச் சென்று மாணவர்களுக்கு ஊக்கமளித்த உத்தமர் ஆவார். இவரது அயராத உழைப்பு மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலயம் கும்பாவிஷேகம் காண வழிவகுத்தது எனலாம். இவரது குடும்பமே ஓர் ஆலயம். அங்கு ஆன்ம ஒருமைப்பாட்டை, அன்பை, விருந்தோம்பலைக் காணலாம். **நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம்** என்ற தன்மைக்கேற்ப வாழ்ந்து மரணதேவனால் அரவணைக்கப்பட்ட இவர் புகழ் உடம்போடு எம்முடன் வாழ்ந்தபடியே இருக்கின்றார்.

அமரர் ஆசிரியர் அவர்களது பணி அளப்பரியது; அளவிடமுடியாதது! அவரது பணி எமக்கு சிறந்த வழிகாட்டி புகழோடு தோன்றிய அந்த அறிஞனின் ஆத்மா சாந்தியடைய வதிரன்புலோ சித்திவிநாயகப் பெருமானையும் முத்துக்குமார சுவாமியையும் பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**க. பாலச்சந்திரன்**
**(உரிமையாளர்)**
**சித்திவிநாயகர் வர்த்தக நிலையம்**

பிள்ளையார்கோவிலடி,
மூளாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச வி

திரு. ச. கந்தசாமி
+
திருமதி. க. தங்கம்

- அழகேசன் + இந்திராதேவி
  - ஜெனி
  - ரெக்ஸ்
- குமரேசன் + கல்யாணி
  - ஷாமிலா
  - ரமேஸ்
- **தர்மேசன்** +
  - தரணிதரன்
  - சேந்தூரன்
- யுவராணி + இராசேந்திரம்
  - கார்த்திகாயினி
- உமாராணி + வசந்தகுமார்
  - யாழினி
  - பிரசாத்
- திலகராணி + சௌந்தரராஜன்
  - லக்ஸ்
  - நிஷா
- நனிகேசன் + குகசாந்தினி
  - அக்ஷயா
  - நிர்விகா
- அரு
  சுத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சம்

திரு. ஏ. வேலாயுதம்
+
திருமதி. வே. மனோன்மணி

அருணேசன்
+
சுதர்ஷனா

மனோராணி
+
இராசரத்தினம்

மதனராணி
+
குமார குருநாதன்
↓
அம்பிகை
பிரணவன்
சுகிர்தாம்பிகை

கருணாகரன்
+
சயந்தி
↓
அனிதா
கோபிகாந்

சிவராணி
+
நந்தகுமார்
↓
பத்மபிரியன்

↓
ஆனந்தராணி
↓
வித்தகதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்வல்

எமது குடும்பத் தலைவருக்கு வைத்திய சேவை வழங்கியோருக்கும், மரண நிகழ்வுக்கு வேண்டிய ஒத்துழைப்பு வழங்கிய வலிகாமம் கல்விவலயம், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள். உத்தியோகத்தர் கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும், பல்கலைக்கழகத் துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையினர், மூளாய் இந்து இளைஞர் சங்கத்தினர், மூளாய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அங்கத்தினர் வலி-மேற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், காங்கேசன்துறை மாவட்ட சாரண ஆணையாளர்கள், சாரண தலைவர்கள், சாரணர்கள், இரங்கலுரை வழங்கியோர், மலர் வளையங்கள் சாத்தியோர், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டோர், பத்திரிகைகளில் அஞ்சலி செலுத்தியோர், இறுதி ஊர்வலத்தின் போது பாண்ட் வாத்திய இசை வழங்கியோர், அணிவகுப்பு மரியாதை நிகழ்த்திய சாரணர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், பல்வேறு வழிகளிலும் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி.

மேலும் அந்தியேட்டிக் கிரியைகளிற் பங்குபற்றியோருக்கும், இன்று எமது இல்லத்தில் இடம்பெறும் அமரரது ஆத்மசாந்தி, அஞ்சலிக் கிரியைகள், பிரார்த்தனைகள் ஆகியவற்றைத் திறம்பட நிறைவேற்றிய அந்தணப் பெருமக்கள், கலந்து கொண்டு சிறப்பித்துள்ள உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், இம் மலரைச் சிறப்பித்து இரங்கற் செய்திகள் வழங்கியோருக்கும், இம்மலரினை அழகுற அச்சிட்டுத் தந்த "கங்கை ஓ(f)செற் பிறின்டேஸ்" நிறுவன உரிமையாளர், ஊழியர்களுக்கும் எமது இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றியில் நிறையும்

குடும்பத்தினர்

"தரன் இல்லம்"
தேவாலய வீதி,
மூளாய், சுழிபுரம்.

கங்கை ஓ(f)செற் பிறின்டேஸ்
(பிறவுண் வீதிக்கு அருகாமையில்) நாவலர் றோட், யாழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org